செ.வெ.எண்:119 நாள்:26.02.2018

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சி நடுநிலைப்பள்ளி, காந்திநகரில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.7 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நூலக கட்டிடத்தினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திறந்து வைத்தார்.

----

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சி நடுநிலைப்பள்ளி, காந்திநகரில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.7 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நூலக கட்டிட திறப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., வர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு நூலக கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

சங்கரன்கோவில் காந்திநகரில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.7 லட்சம் மதிப்பில் புதிய நூலக கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவ, மாணவிகள் தினசரி நூலகத்திற்கு சென்று புத்தக வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திகொள்ள வேண்டும். அதிக புத்தகங்களை படிப்பதால் அறிவு வளர்ச்சி அடையும். இன்று சங்கரன்கோவில் நகராட்சி பகுதிகளுக்கான கூட்டு குடிநீர் திட்ட பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவடைந்தால் 2047 ஆம் ஆண்டு வரை பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பள்ளி நான் சிறு வயதில் படித்த பள்ளியாகும். இப்பள்ளியில் உள்ள பழைய கட்டிடங்களை அகற்றி புதிய கட்டிடங்கள் கட்ட தேவையான நிதி வழங்கப்படும். மாணவ, மாணவிகள் ஆசிரியர்கள் கற்றுதரும் பாடங்களை சிறப்பாக கற்று வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும். என பேசினார்.

தொடர்ந்து சிறந்த மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

இவ்விழாவில் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையர் திரு.தாணுமூர்த்தி, டான்பெட் துணை தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, ஆவின் சேர்மன் திரு.ரமேஷ், நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர் திரு.ஆறுமுகம், நெல்லை கூட்டுறவு பேரங்காடி இயக்குநர் திரு.வேல்சாமி, முன்னால் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன், நகராட்சி பொறியாளர் திரு.முகைதீன் அப்துல்காதர், எ.கே.எம் கட்டுமான நிறுவனர் உரிமையாளர்.திரு.குட்டி மாரியப்பன், முக்கிய பிரமுகர் திரு.வேல்முருகன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் , அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.